**ஏப்ரல் – 25**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர், அடையார் புற்றுநோய் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் V. சாந்தாவின் சிலையைத் திறந்து வைத்து, சென்னையில் உள்ள அடையாரில் உள்ள அந்த நிறுவனத்தின் வளாகத்தில் அவருக்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப் பட்ட ஒரு நினைவு அருங்காட்சியகத்தையும் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு மாநிலத் தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் (TIDCO) ஆனது, குறைக்கடத்தி, பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறைகளில் உள்ள தொழில்துறைகளுக்காக என்று கோயம்புத்தூரில் 350 ஏக்கர் பரப்பில் தொழில்துறைப் பூங்காவை அமைக்க உள்ளது.
- தமிழக மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு தனியார் பல்கலைக் கழகங்கள் (திருத்தம்) சட்டம், 2024 மற்றும் தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள் (உரிமம்) திருத்தச் சட்டம், 2024 ஆகிய இரண்டு மசோதாக்களும் தமிழக ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றதையடுத்து தமிழ்நாடு மாநில அரசானது இந்த இரண்டு சட்டங்களையும் மாநில அரசிதழில் வெளியிட்டுள்ளது.
- தமிழக அரசானது, தர்மபுரியில் உள்ள பென்னாகரத்தில் விளையும் ஒரு புளி வகைக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்வதற்காக வேண்டி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.
- பாரதிதாசனின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 05 ஆம் தேதி வரையில் தமிழ்நாட்டில் தமிழ் வாரம் கொண்டாடப்படும்.
- ஒரு நாளைக்கு சுமார் 10,000 பயணிகளின் போக்குவரத்தினைக் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் மிகப்பெரியதொரு பயணியர் கப்பல் முனையமான மும்பை சர்வதேச பயணியர் கப்பல் முனையம் (MICT) சமீபத்தில் திறக்கப்பட்டது.
- ஜம்மு காஷ்மீரின் நதாடோப்பின் உயரமான மலைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது "இமயமலை அதி உயர் மட்ட வளிமண்டல மற்றும் பருவநிலை ஆராய்ச்சி மையம்" தற்போது திறக்கப்பட்டுள்ளது.
- பயிர்ச் சாகுபடி முன்னேற்றம் குறித்த விரிவான தொலை உணர்திறன் கண்காணிப்பு (CROP) என்பது இஸ்ரோவின் தேசிய தொலை உணர்திறன் மையத்தினால் (NRSC) உருவாக்கப்ப ட்ட ஒரு பகுதியளவு மற்றும் மேம்படுத்தக்கூடியக் கட்டமைப்பாகும்.
  - இது இந்தியா முழுவதும் ராபிப் பருவத்தில் பயிர் விதைப்பு மற்றும் அறுவடையை நிகழ்நேரத்தில் கண்காணிக்க உதவுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஓசூர் விமான நிலையம் குறித்த சாத்தியக்கூறு அறிக்கை

- இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) ஆனது, ஓசூர் விமான நிலையத் திட்டத்தின் இறுதி சாத்தியக்கூறு அறிக்கையை தமிழக அரசிடம் ஒப்படைத்துள்ளது.
- இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகமானது அப்பகுதியின் வான்வெளி மீதான ஒரு கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளதால், இதற்கு அதன் அனுமதியும் மற்றும் ஒப்புதலும் தற்போது தேவையாகும்.
- கடந்த ஆண்டு, தமிழ்நாடு அரசானது இதுவரையில் கட்டுமானப் பணிகள் எதுவும் மேற் கொள்ளப் படாத நிலத்தில் அமைக்கப்படும் (பசுந்தடம்) ஒரு விமான நிலையத்தினை ஓசூரில் நிறுவுவதற்கு முன்மொழிந்தது.

- இந்திய விமான நிலைய வாரியமானது, ஐந்து இடங்களை ஆய்வு செய்தது என்ற ஒரு நிலையில் மாநில அரசானது அந்தப் பட்டியலிலிருந்து தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட் (TAAL) மற்றும் ஒசூர் தாலுக்காவிற்கு தெற்கில் உள்ள ஒரு தளம், ஒசூருக்கு கிழக்கிலும் சூளகிரிக்கு வடக்கிலும் உள்ள மற்றொரு தளம் என இரண்டு தளங்களை இறுதி செய்தது.
- ஆனால், பொது விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கும் பெங்களூரு சர்வதேச விமான நிலைய லிமிடெட்டிற்கும் இடையிலான ஒப்பந்தம் ஆனது, 2033 ஆம் ஆண்டு வரையில் சுமார் 150 கி.மீ பரப்பிலான வான்வழி தூரத்திற்குள் வேறு எந்த விமான நிலையத்தையும் உருவாக்குவதைத் தடை செய்கிறது.




## 2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சுகாதாரத் துறை அறிவிப்புகள்





- தமிழ்நாடு சுகாதார அமைச்சர் 642 புதிய துணை சுகாதார மையங்கள் அமைக்கப்பட உள்ளதாக அறிவித்துள்ளார்.
- சுமார் 10,000க்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள சில பகுதிகளில் இந்தத் துணை சுகாதார மையங்கள் அமைக்கப்படும்.
- 13 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு சிறப்புப் பல்நோக்கு மருத்துவமனையில் 500 முதுகலை படிப்பிற்கான இடங்கள் கூடுதலாக வழங்கப் படும்.
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 7,618 குழந்தைகளுக்கு தமிழ்நாடு

அறக்கட்டளை மூலம், மாதம் 1,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

- மேம்படுத்தப்பட்ட 50 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்தச் சுத்திகரிப்பு (கூழ்மப் பிரிப்பு - டயாலிசிஸ்) வசதிகள் அறிமுகப்படுத்தப்படும்.
- அரசு மருத்துவமனைகளுக்கு வரும் வெளிநோயாளிகளின் எண்ணிக்கையானது 56%, உள்நோயாளிகள் 43% மற்றும் அறுவைச் சிகிச்சைகள் 61% என்ற அளவில் அதிகரித்து உள்ளது.
- சுமார் 20,197.40 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடு 8.4% அதிகரித்து 21,906 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## DBT தொடர்பான இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கை




- இந்தியாவின் நேரடிப் பயன் பரிமாற்ற (DBT) முறையானது, பயன் வழங்கீடானது பயனரை முழுமையாகச் சென்றடையாத நிலையினைப் பூர்த்தி செய்வதன் மூலம் இந்தியா ஒட்டு மொத்தமாக 3.48 லட்சம் கோடி ரூபாய்ச் சேமிப்பை அடைய உதவி உள்ளது.
- DBT காரணமாக மொத்த அரசாங்கச் செலவினத்தில் மானிய ஒதுக்கீடுகள் ஆனது 16 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன.
- பயனாளிகளின் எண்ணிக்கையானது, 11 கோடியிலிருந்து 176 கோடியாக 16 மடங்கு உயர்ந்துள்ளது.

## India Skills Accelerator முன்னெடுப்பு


- மத்தியத் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் ஆனது, "India Skills Accelerator" என்ற முன்னெடுப்பினைத் தொடங்குவதற்கு உலகப் பொருளாதார மன்றத்துடன் கூட்டுறவினை மேற்கொண்டுள்ளது.
- புதுமையான கருத்தாக்கங்களை வெளிக்கொணரச் செய்வதற்கான பல்வேறு துறை சார் முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவதற்கு வேண்டி இது ஒரு பொது-தனியார் ஒத்துழைப்பு தளமாக செயல்படும்.

- மூன்று முக்கியமான நிலைகளில் மாற்றத்தை ஊக்குவிப்பதை இந்தத் திட்டமானது நோக்கமாகக் கொண்டுள்ளது, அவையாவன;
  - எதிர்காலத் திறன் சார் தேவைகளைப் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் மனநிலையை மாற்றுதல்
  - பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பகிர்வை அதிகரித்தல்; மற்றும்
  - அதிக ஏற்பமைவு மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளத் தக்கத் திறன் சார் சூழல் அமைப்பை உருவாக்குவதற்கு என்று நிறுவனக் கட்டமைப்புகள் மற்றும் பல்வேறு கொள்கை கட்டமைப்புகளை மேம்படுத்த உறுதியளித்தல்.




# சர்வதேசச் செய்திகள்

## ஹைட்ரஜன் வெடிகுண்டு - சீனா




- சீன அறிவியலாளர்கள் அணுசக்தி சாராத வெடி குண்டினை உருவாக்கியுள்ளனர்.
- இது இரண்டு வினாடிகளுக்கு மேல் நீடிக்கும் வெள்ளை நிறச் சூடான தீப்பிழம்பினை

உருவாக்குகின்ற ஹைட்ரஜன் எரிபொருளை அடிப்படையாகக் கொண்டது.

- இரண்டு கிலோ குண்டினால் உருவாக்கப்படும் தீப்பிழம்பு நீடிக்கும் கால அளவு ஆனது அதற்குச் சமமான TNT வெடிகுண்டுகளை விட 15 மடங்கு அதிகமாகும்.
- இது வழக்கமான அழுத்தப்பட்ட கலன்களை விட மிக கணிசமாக அதிக அடர்த்தியில் ஹைட்ரஜனை சேமிக்கக் கூடிய ஒரு முக்கிய கூறான மெக்னீசியம் ஹைட்ரைடைப் பயன்படுத்துகிறது.
- ஒரு நிலையான வெடிபொருளால் நன்கு வெடிக்கத் தூண்டப்படும் போது, மெக்னீசியம் ஹைட்ரைடு விரைவான வெப்பச் சிதைவுக்கு உட்பட்டு, ஹைட்ரஜன் வாயுவை அது வெளியிடுகிறது.
- இந்த வாயு காற்றில் கலந்தவுடன் பற்றி எரிந்து, சுமார் 1,000°Cக்கும் அதிகமான வெப்ப நிலையை எட்டக்கூடிய ஒரு தீப்பிழம்பினை உருவாக்குகிறது என்பதோடு இது TNT வெடி குண்டுகளால் உற்பத்தி செய்யப்படும் வெப்பநிலையை விட மிக அதிகமாகும்.

### ஜ்வானெங் வைரச் சுரங்கம் – போட்ஸ்வானா




- 'சுரங்கங்களின் இளவரசர்' என்று அழைக்கப்படுகின்ற போட்ஸ்வானா நாட்டில் உள்ள ஜ்வானெங் வைரச் சுரங்கமானது உலகின் செல்வ வளமிக்க/பணக்காரச் சுரங்கமாக திகழ்கிறது.
- இது தொடங்கப்பட்டதிலிருந்து சுரங்கத்தின் வருவாய் ஆனது 96 பில்லியன் டாலரைத் தாண்டியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 1982 ஆம் ஆண்டு முதல், இது மில்லியன் கணக்கான காரட் தங்கங்களை ஈட்டியுள்ளது என்பதோடு 2023 ஆம் ஆண்டில் சுமார் 13.3 மில்லியன் காரட் தங்கம் இச்சுரங்கத்தில் வெட்டி எடுக்கப்பட்டது ஒரு சாதனை பதிவாகும்.
- ஜ்வானெங் ஒரு பண்டைய கால எரிமலைப் பள்ளத்தில் அமைந்துள்ளது.

## பொருளாதாரச் செய்திகள்

### இந்தியாவின் திறன்பேசி ஏற்றுமதி 2024/25

- நாட்டின் கைபேசி ஏற்றுமதியானது, குறிப்பிடத் தக்க மைல்கல்லைக் கடந்து, 2024-25 ஆம் நிதியாண்டில் பதிவான 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது.

- இந்த எண்ணிக்கையில் ஐபோன் ஏற்றுமதியானது மட்டும் சுமார் 1.5 லட்சம் கோடி ரூபாய் பங்கினைக் கொண்டுள்ளது என்பதோடு இது முந்தைய நிதியாண்டை விட 54% வளர்ச்சியைக் குறிக்கிறது.
- 2024-25 (FY25) ஆம் நிதியாண்டில், 3.27 மில்லியன் ரூபாய் (38.6 டிரில்லியன் டாலர்) என்ற ஒரு அதிகபட்ச மதிப்புடன் நாட்டின் மூன்றாவது பெரியதொரு ஏற்றுமதிப் பிரிவாக மின்னணுவியல் துறை முன்னேறியுள்ளது.
- 2023-24 ஆம் நிதியாண்டில், மின்னணுவியல் துறையானது ஏற்றுமதியில் ஐந்தாவது இடத்தில் இருந்தது.

| India's top sectors in exports | FY25 (in ₹ trn) | % change |
|---|---|---|
| Engineering | 9.86 | 9.06 |
| Petroleum | 5.34 | -23.24 |
| Electronics | 3.27 | 35.67 |
| Drugs and pharmaceuticals | 2.57 | 11.86 |
| Gems & jewellery | 2.52 | -6.83 |
| Organic and inorganic chemicals | 2.42 | -0.2 |

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2025 ஆம் ஆண்டு குடிமைப் பணிகள் தின விருதுகள்




- புது டெல்லியில் நடைபெற்ற 17வது குடிமைப் பணிகள் விழா தினத்தின் போது பொது

நிர்வாகத்தில் சிறந்து விளங்குவோருக்கான பிரதமர் விருது வழங்கப்பட்டது.

- இந்த 14 விருதுகள் ஆனது பின்வரும் முன்னுரிமைத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டன:
    - வகை 1 - மாவட்டங்களின் முழுமையான மேம்பாடு
    - வகை 2- இலட்சிய நோக்கமிக்கத் தொகுதிகள் திட்டம்
    - வகை 3 – புத்தாக்கம்.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தினால் (MoWCD) உருவாக்கப் பட்ட போஷன் டிராக்கர் செயலிக்கு, புத்தாக்கப் பிரிவின் (மத்திய அரசின்) கீழ் விருது வழங்கப்பட்டுள்ளது.

## லாரஸ் உலக விளையாட்டு விருதுகள் 2025




- ஸ்பெயினில் வழங்கப்பட்ட 2025 ஆம் ஆண்டு லாரஸ் உலக விளையாட்டு விருதுகளில் சுவீடன் நாட்டினைச் சேர்ந்த கோலூன்றித் தாண்டும் விளையாட்டு வீரர் அர்மண்ட் டுப்லாண்டிஸ் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டில் அமெரிக்காவினைச் சேர்ந்த ஜிம்னாஸ்ட் வீராங்கனை சைமன் பைல்ஸ் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- ரியல் மாட்ரிட் அணியானது ஆண்டின் லாரஸ் சிறந்த அணிக்கான விருதைப் பெற்று உள்ளது.
- ஆண்டின் லாரஸ் சிறந்த உலகத் திருப்புமுனை ஆட்டக்காரர் விருதை லாமின் யமல் பெற்றுள்ளார்.
- ஆண்டின் லாரஸ் சிறந்த உலகத் திருப்புமுனை ஆட்டக்காரர் விருதை பிரேசில் நாட்டு ஜிம்னாஸ்ட் வீரர் ரெபேக்கா ஆண்ட்ரேட் வென்றுள்ளார்.
- 'பறக்கும் மீன்' என்றும் அழைக்கப்படும் சீனாவின் ஜியாங் யுயான், இந்த ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- டாம் பிட்காக் இந்த ஆண்டிற்கான உலக அதிரடி விளையாட்டு வீரருக்கான விருதை வென்றுள்ளார்.

- ரஃபேல் நடால் லாரஸ் சிறந்த விளையாட்டு வீரர் (ஜகான்) விருதைப் பெற்றுள்ளார்.
- லாரஸ் பயன் விளைவிற்கான விளையாட்டு விருது ஆனது கிக்4லைஃப் என்ற ஒரு தொண்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- சிறந்த அலைச்சறுக்கு வீரரான கெல்லி ஸ்லேட்டர், லாரஸ் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுள்ளார்.

# இதரச் செய்திகள்

## Compassion and primary health care அறிக்கை

- உலக சுகாதார அமைப்பானது, முதன்மைச் சுகாதார அமைப்புகளில் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கும் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மனிதாபிமானம்/இரக்கம் (விழிப்புணர்வு, அனுதாபம் மற்றும் நல்ல செயலால் வகைப் படுத்தப் படுகிறது) ஆனது PHC, தரமான நலப் பராமரிப்பு மற்றும் சுகாதார அமைப்பு மாற்றத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு மாறுதல் உண்டாக்கும் சக்தியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் விரிவான ஆரம்ப சுகாதார அமைப்பு உள்ளது.
- இந்தியாவில் சுமார் 3,000-5,000 மக்களுக்குச் சுகாதாரச் சேவையை வழங்கச் செய்யும் தொலைதூரப் பகுதிகளில் துணை மையங்களும், 20,000-30,000 மக்களுக்குச் சேவை வழங்கும் ஆரம்பச் சுகாதார மையங்களும் (PHCs) மற்றும் 80,000-1,20,000 மக்களுக்கு சேவை வழங்கும் சமூக சுகாதார மையங்களும் (CHCs) உள்ளன.
- மொத்தத்தில், 1.6 லட்சம் துணை மையங்கள்; 26,636 ஆரம்பச் சுகாதார மையங்கள்; மற்றும் 6,155 பொதுச் சுகாதார மையங்கள் உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★